UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education
Advanced Subsidiary Level and Advanced Level

**TAMIL** **8689/02**
**9689/02**

Paper 2 Reading and Writing **October/November 2007**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண் உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம், ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் ( ) தரப்பட்டிருக்கும்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

SP (SM/TL) T32434/2
© UCLES 2007
UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

www.theallpapers.com

பகுதி — 1

முதலில் கீழே தரப்பெற்றுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

தமிழ் நாட்டில் இயற்கை எழில்மிக்க பல சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. அவற்றில் தென்காசிக்கு அருகிலுள்ள குற்றாலம் மிகவும் புகழ்பெற்றது. இது ஏராளமான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கின்றது. இதற்கு பேருந்து வழியாகவும் புகைவண்டி மூலமும் போகலாம். புகைவண்டியில் போனால் தென்காசியிலிருந்து கார்களிலோ அல்லது பேருந்துகளிலோ செல்லலாம்.

குற்றாலம் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. மலையிலிருந்து பல அருவிகள் விழுகின்றன. இந்த அருவிகளில் குளிக்கவே மக்கள் பெருந்திரளாக வருகின்றனர். ஆண்டுதோறும் வைகாசி, ஆனி, ஆடி , ஆவணி மாதங்களில் மலையிலிருந்து தண்ணீர் அருவிகளாக விழும். இதன் அழகை சொற்களால் வருணிக்க முடியாது. இதைக் காண கண் கோடி வேண்டும் என்று புலவர்கள் பாடியுள்ளனர்.

சித்ரா நதி என்ற ஒரு சிறிய ஆறு மழை வெள்ளத்தால் பெருக்கெடுத்து பல இடங்களில் பிரிந்து அருவிகளாக விழுகிறது. இவைகளில் முக்கியமானவை ஐந்தருவி , பெரிய அருவி ,பழைய குற்றால அருவி, புலி அருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி என்பனவாம். சித்ரா நதி ஒரு பெரிய பள்ளத்தில் விழுந்து பின்னர் கீழே பெரிய அருவியாக விழுகிறது. அந்த இடத்தை பொங்குமாங்கடல் என்று அழைப்பர். இந்த அருவியிலும் ஐந்தருவியிலும் தான் அதிகமான மக்கள் குளிக்கிறார்கள். அருவிகளுக்கு மற்றொரு பெயர் நீர்வீழ்ச்சி.

இந்த அருவிகளில் குளித்தால் உடல் நோய்களும் மன நோய்களும் தீருகின்றன. பல மூலிகைகளில் பட்டு தண்ணீர் வருவதால் இதற்கு மருத்துவ குணங்கள் இருப்பதில் வியப்பில்லை. மேலும் இயற்கைக் காட்சிகள் எல்லோருக்கும் மன அமைதியைத் தரும். மலையின் மீது ஏராளமான உயர்ந்த மரங்கள் இருக்கின்றன. செண்பக மரங்கள் இடையே அருவி விழும் இடம் செண்பகாதேவி அருவி என்று அழைக்கப்படுகிறது. அங்கு ஒரு சிறிய அம்மன் கோவிலும் உள்ளது.

இதற்கு மேலும் மலை மேலே ஏறிச் சென்றால் தேனருவி இருக்கிறது. பெரிய பாறைகளின் மேலே பெரிய தேனடைகள் உள்ளன. அவைகளின் ஊடாக நீர் புகை போல விழும் காட்சியை ஒரே முறை பார்த்தாலும் மனதை விட்டு அகலாது. இந்தக் காட்சியை திரிகூடப்பக் கவிராயர் என்ற புலவர் மிக அழகாக வருணித்து பாடியுள்ளார்.

குற்றாலத்தில் நாயன்மார்களால் பாடல் பெற்ற ஒரு சிவன் கோவில் உண்டு. பாடல் பெற்ற தலமாகையால் திருக்குற்றாலம் என்றும் இந்த நகரை அழைப்பர். இதை தரிசிக்கவும் பக்தர்கள் வருகின்றனர். குற்றாலத்தில் அருவி நீர் விழத் துவங்கிவிட்டால் 30 அல்லது 40 மைல் சுற்று வட்டாரத்துக்கு சாரல் காற்று வீசும். கோடை காலத்தில் இது உடலுக்கு நல்ல சுகம் தரும். குற்றால மலையில் சந்தன மரங்கள் போன்ற விலை உயர்ந்த மரங்களும் நிறைய பழ மரங்களும் வளருகின்றன. ஒரு காலத்தில் அடர்ந்த காடுகள் இருந்தன. அதில் புலி ,யானை , கரடி போன்ற



www.theallpapers.com

மிருகங்கள் இருந்தன. ஆண்டுதோறும் தாவரவியல் படிக்கும் மாணவர்கள் இங்கே வந்து பல வகையான தாவரங்களைச் சேகரிக்கின்றனர். இதன் மூலம் மாணவர்களின் அறிவு வளருகிறது.

குற்றாலக் குறவஞ்சி என்ற நூலில் இந்த மலையின் முழு அழகையும் காணலாம். பல திரைப்படங்களிலும் இந்த இயற்கைக் காட்சிகள் பின்னணியாக வருகின்றன. அங்கு பல மூலிகைப் பண்ணைகளும் உள்ளன. ஏராளமான மக்கள் வருவதால் பெரிய சந்தைகளும் கடைகளும் தோன்றியுள்ளன. சுற்றுலாத் தொழில் பெருமளவு வளர்ந்துள்ளது.

தமிழ் நாட்டில் வேறு பல இடங்களிலும் மலை அருவிகள் இருந்தாலும் குற்றாலத்தைப் போல எளிதில் அணுகமுடிவதில்லை. நிறைய மக்கள் குளிக்குமளவுக்கு அங்கு பரவலாக தண்ணீர் விழுவதுமில்லை. இன்ன பல காரணங்களால் அருவிகளில் தலைசிறந்த அருவியாக குற்றாலம் திகழ்கிறது.

**1** கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

(எ.கா.) புகை வண்டி ஓடும் பாதை —தண்டவாளம்

அ) பெயர் பெற்ற [1]
ஆ) மலையிலிருந்து விழும் நீர் [1]
இ) மலையின் கீழ்ப் பகுதி [1]
ஈ) ஒவ்வொரு வருடமும் [1]
உ) சிவனை வணங்கிய அடியார்கள் [1]

(மொத்தம் 5 மதிப்பெண்கள்)

**2** கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக் கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக

எடுத்துக்காட்டு — அன்பு
விடை — குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்

அ) புகழ்பெற்றது (பத்தி 1) [1]
ஆ) இயற்கை எழில் (பத்தி 1) [1]
இ) புலவர் (பத்தி 2) [1]
ஈ) வியப்பில்லை (பத்தி 4) [1]
உ) பிண்ணனி (பத்தி 7) [1]

(மொத்தம் 5 மதிப்பெண்கள்)

**3** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது விடைகளைத் தருக.

1. குற்றாலத்தின் இயற்கை எழிலை வருணிக்கவும் ( 3 மதிப்பெண்கள்)
2. குற்றால அருவிகளில் மக்கள் குளிப்பதன் காரணம் என்ன? ( 2)
3. தேனருவி என்று பெயர் வரக் காரணம் என்ன? (2)
4. பாடல் பெற்ற தலம் — விளக்குக. (2)
5. இலக்கியத்தில் இந்த இடம் எப்படி வருணிக்கப்பட்டுள்ளது? (2)
6. குற்றாலத்துக்கு வரும் மக்களில் 3 வகையான மக்களைக் கூறுங்கள். இது குற்றால மக்களுக்கு எப்படி உதவுகிறது? (4)

(சிறந்த மொழித் திறன் — 5)
(மொத்தம் — 20 மதிப்பெண்கள்)

© UCLES 2007

www.theallpapers.com

பகுதி — 2

## சுற்றுலா

சுற்றுலா என்பது வெறும் கேளிக்கைக்காகவும் வேடிக்கை வினோதங்களுக்காகவும் மட்டும் அல்ல. அறிவு வளர்ச்சியே அதன் நோக்கமாக இருக்கவேண்டும். பயணங்கள் நமது அனுபவத்தை விரிவாக்குகின்றன. தேசப் படங்களின் மூலம் நாம் பல்வேறு இடங்களையும் பல நாடுகளையும் பற்றி அறிந்துகொள்கிறோம். எனினும் நேரில் செல்லும்போதுதான் நமக்கு நேரடி அனுபவம் கிடைக்கிறது. ஒரு இடத்துக்குச் செல்வதற்கு முன்னால் அந்த இடத்தின் வரலாற்றை நன்றாகப் படித்திருக்க வேண்டும். அந்த இடங்களுக்கு நேரில் செல்லும்போது அந்த இடங்களின் முக்கியமான விசயங்களைக் குறிப்பு எடுத்துக்கொள்ளவேண்டும்.

மூத்தவர்களுக்குக் கீழ்ப்படிதல் சுற்றுலா வேளைகளில் மிக முக்கியமான ஒன்றாகிவிடுகிறது. வண்டியில் ஏறும்போது ஒருவர் பின் ஒருவராக நிதானமாக ஏறவேண்டும். பொருட்காட்சி சாலைகளுக்குச் சென்றால் அங்கு வைக்கப்பட்டுள்ள எந்தப் பொருளையும் அனுமதியின்றி தொடக்கூடாது. ஒரு இடத்தின் சிறப்பைப் பற்றி ஆசிரியரோ பிறரோ விளக்கும்போது கவனமாகக் கேட்கவேண்டும்.

சுற்றுலா செல்லும்போது நகைகள் போன்ற விலை உயர்ந்த பொருட்களை எடுத்துச் செல்லக்கூடாது. ஆறு அல்லது கடலுக்கு அருகில் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஆசிரியர்களின் துணையின்றி அவற்றில் குளிப்பதும் நீந்தி விளையாடுவதும் மிகவும் ஆபத்தானது.

பயண வேளைகளில் வண்டியிலிருந்து தலையையோ கைகளையோ வெளியே நீட்டக்கூடாது. நமது பயணம் பத்திரமாக மட்டுமின்றி மகிழ்ச்சியாகவும் அறிவுக்கு விருந்தாகவும் அமைவதற்காக நாம் பயணம் கிளம்புவதற்கு முன்னால் தெளிவாகத் திட்டமிடவேண்டும். சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்களை பட்டியலிட்டு அவைகளைப் பெட்டிக்குள்ளோ பைக்குள்ளோ எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். வேற்று மொழி வழங்கும் இடங்களுக்கு பயணம் செய்தால் அந்த மொழியில் சில அவசியமான வாக்கியங்களைக் கற்றுக்கொள்வது நல்லது. நிறைய சாமான்களையோ விலை உயர்ந்த பொருட்களையோ கொண்டுசென்றால் பல வித இன்னல்கள் நேரிடலாம்.

4 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்திமிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது விடைகளை எழுதுக.

1. சுற்றுலா என்பது வெறும் கேளிக்கை அல்ல என்பதை விளக்குக (5 மதிப்பெண்கள்)
2. ஆசிரியருடன் சுற்றுலா போவதன் பயன்கள் என்ன? ( 5)
3. நீங்கள் சுற்றுலா போவதானால் எப்படி திட்டமிடுவீர்கள்? (5)

(சிறந்த மொழித்திறன் — 5 )
(மொத்தம் — 20 மதிப்பெண்கள)

© UCLES 2007

www.theallpapers.com

5 பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

1. நீங்கள் மேலே படித்த இரண்டு பகுதிகளும் பிரயாணம் பற்றியவை — முதலாவது சுற்றுலா தலம் பற்றியும் இரண்டாவது கல்விச் சுற்றுலா பற்றியும் கூறுகிறது. கல்விச் சுற்றுலாவுக்கும் மற்ற சுற்றுலாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? (10)

2. சுற்றுலா செல்வது முக்கியமா? காரணங்களுடன் விடை தருக. (5)

(சிறந்த மொழித் திறன் — 5)
(மொத்தம் — 20 மதிப்பெண்கள்)

© UCLES 2007

www.theallpapers.com

BLANK PAGE



www.theallpapers.com

**BLANK PAGE**



www.theallpapers.com

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

Question 4 © *Nalvazhi*.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com